


பத்திரிகைகளின் பார்வையில்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்-1989

பத்திரிகைகளின் பார்வையில்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்-1989

பதிப்புரை

1989 ஜனவரித் திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தனிச்சிறப்புடையது; வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. இத்தேர்தல் முடிவுகள் பற்றி புகழ்பெற்ற தமிழ், ஆங்கில ஏடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து 'பத்திரிகைகளின் பார்வையில் — தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 1989' என்னும் தலைப்பில் இச்சிறப்பு வெளியீட்டை வெளியீட்டுப் பிரிவின் சார்பில் வெளியிடுவதில் பெருமகிழ்வடை கிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்பு,
செய்தி சுற்றுலாத்துறை,
தமிழ்நாடு அரசு.



மிகத் தெளிவான தீர்ப்பை வழங்குவதில் திறமைமிக்க தமிழ் மக்கள், இந்தத் தேர்தலில் தி.மு. கழகத்தை மகத்தான வெற்றி பெறச் செய்து இருக்கிறார்கள். மெஜாரிட்டியையும் தாண்டிய 'முரட்டுத்தனமான' பலத்துடன் இன்று ஆளும் கட்சியாக அமர்கிறது தி.மு.க.

இந்தப் பயங்கர பலத்துடன் ஆட்சியில் அமருகிறவர்கள், சில மாதங்களிலேயே வழி தவறித் தலைக்கனத்தோடு ஆட்சி புரிவதையும் அதனாலேயே மக்களால் கீழே இறக்கப்படுவதையும் தமிழ்நாட்டில் பார்த்திருக்கிறோம்.

தி.மு. கழகத்துக்கு இந்த வெற்றியும் இந்த பலமும் புதிதல்ல. 1967-லும், 1971-லும் அந்தக் கட்சி சுவைத்தவையே! அதேபோல, மக்களால் பதவி இறக்கம் செய்யப்பட்ட அனுபவமும் அதற்கு உண்டு.

அதனால்தான், இம்முறை தி.மு. கழகத்தை வழி நடத்தும் அதன் தலைவர் கலைஞர் கருணாநிதி வெற்றி வந்தபோது நிதானத்தோடு காட்சி அளிக்கிறார். 'தி.மு.க.வை ஆதரித்தவர்களையும் எதிர்த்தவர்களையும் வேறுபாடின்றி அரவணைத்து ஆட்சி நடத்துவேன். பழிவாங்கும் கொள்கை தி.மு.க. கடைப்பிடிக்காது' என்று அவர் கூறியிருப்பது நிதானத்தையே எடுத்துக் காட்டுகிறது.

ஆரவார அரசியல்களை நிறையவே பார்த்துவிட்டவர்கள் தமிழக மக்கள். ஆகவே, இம்முறை தமிழகத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட, தொழில்துறை ஏற்றம் பெறக் கண்ணும் கருத்துமாகக் கலைஞர் செயல்பட வேண்டும் என்பதே மக்கள் கோரிக்கை!

இந்த எதிர்பார்ப்புகளுடன், தமிழக மக்களுடன் நாமும் சேர்ந்து, 'கலைஞரே வருக! கருத்தான ஆட்சி தருக! என்று முகமன் கூறுகிறோம்!


— ஆனந்தவிகடன்
29.1.'89

வரலாற்றில் இடம் பெறத்தக்க மகத்தான தீர்ப்பு

கழகம் அமோக வெற்றி பெற்றிருக்கிறது! காங்கிரசின் தமிழகத் தலைவர் தமது சொந்த ஊரிலேயே போட்டி போட்டு—பாபனாசம் தொகுதியில் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்ற நிலையில் 1092 வோட்டுக்களில்தான் வெற்றி பெற முடிந்திருக்கிறது.

ஆனால்—கழகத்தை வெற்றி பெறச் செய்த தமிழக மக்களுக்கு நன்றி கூறுவது போல—துறைமுகம் தொகுதி மக்கள்—தலைவர் கலைஞர் அவர்களை இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூட வைத்திருக்கிறார்கள்! கலைஞரை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் டெபாசிட் இழந்த தொகுதி என்ற அளவிற்கு வாக்களித்து—தமிழகத்தின் அடுத்த முதல்வர் கலைஞர்தான். கலைஞர் ஆட்சியிலேயே தமிழ் வளரும். தமிழர் வாழ்வு வளம்பெறும். தமிழகம் தொழில்மயமாகி பொற்காலத் தமிழகமாக மலரும்—என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர்.

— குங்குமம்
27 ஜனவரி - 2 பிப். - '89



தி.மு.க.வின் வெற்றி


முதலில் சொல்ல வேண்டியது—பெருவாரியான வாக்காளர்கள் நான் சொன்ன கருத்துக்களைச் சுத்தமாக ஏற்கவில்லை; முழுமையாகப் புறக்கணித்திருக்கிறார்கள். தி.மு.க.—ஜெயலலிதா கட்சி, இரண்டையும் புறக்கணிக்க வேண்டும் என்பதுதான், நான் தெரிவித்த கருத்துக்களின் மையம். வாக்களித்தவர்களில் சுமார் 54 சதவிகிதத்தினர், இந்த இரு கட்சிகளையும் (கூட்டணிகளை அல்ல) ஆதரித்திருக்கிறார்கள். ஆனால், மொத்த வாக்காளர்களில் இந்த இரு கட்சிகளுக்கும் (கூட்டணிகளுக்கு அல்ல) ஆதரவு அளித்தவர்கள் 37 சதவிகிதத்தினர். எப்படிப் பார்த்தாலும் பலமுறை நிகழ்ந்திருப்பதுபோல் இப்போதும் என் கருத்தை ஏற்க வாக்களிப்போரில் பெரும்பான்மையோர் தயாராக இல்லை என்பதை இந்தத் தேர்தலும் நிரூபித்திருக்கிறது.

அடுத்துச் சொல்ல வேண்டிய விஷயம்—தன் கட்சிக்கு இருந்த ஆதரவை, பன்னிரண்டு வருடமா.கச் சிதறி விடாமல் கட்டிக் காத்த கருணாநிதியின் திறமை ; எம். ஜி. ஆர். உயிரோடு இருந்த வரையிலும் வெற்றி பெற முடியாவிட்டாலும், 'நமக்கும் ஒரு நாள் வரும்' என்று இத்தனை ஆண்டு காலம் காத்திருந்த அவருடைய நம்பிக்கை; தேர்தலுக்கு முன்பும் சரி, தேர்தலின் போதும சரி. அவரிடமிருந்து வெளிப்பட்ட கடுமையான உழைப்பு; தங்கள் கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தி.மு.க. வினர் தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட வேகம்; இவை அத்தனைக்கும் சேர்ந்து கிடைத்திருக்கும் பரிசு, தி.மு.க. இத்தேர்தலில் பெற்றிருக்கும் வெற்றி.

இவ்வளவு ஆண்டு காலம் பதவி இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டால், கருணாநிதி போல் எத்தனை தலைவர்கள் மீண்டும் உழைத்திருப்பார்கள், தி.மு.க.வைப் போல் எத்தனை கட்சிகள் நம்பிக்கையுடன் இயங்கிக் கொண்டு இருந்திருக்கும் என்பதெல்லாம் கேள்விக்குறிகளே!

சினிமாத் துறையிலிருந்து பலர் பிரச்சாரம் செய்ததால் தான் தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது என்று சொல்ல முடியாது. அவர்களுடைய முயற்சிகள், கூட்டத்தை வரவழைப்பதற்குத் தானே தவிர, ஓட்டுக்களைப் பெறுவதற்கு அல்ல. வி.பி. சிங் போன்ற அகில இந்தியத் தலைவர்கள் பலர் வந்து பிரச்சாரம் செய்ததால், தி.மு.க.வுக்கு ஓட்டு கூடியிருக்கப் போவதில்லை. தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் தேவைப்படும் சில தோற்றங்களுக்குத்தான் இம்மாதிரி பிரச்சாரங்கள் பயன்படும். ஆகையால், தி.மு.க. பெற்றிருக்கும் வெற்றி அக்கட்சியினுடையது, கருணாநிதியினுடையது. சந்தேகமில்லை.

— துக்ளக்
1.2.89



வாழ்த்துகிறோம்!

பிரமிக்கத் தக்க வகையில் வெற்றி பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அதன் இணையற்ற தலைவர் கருணாநிதிக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

தளராத தன்னம்பிக்கை, அசைக்க முடியாத பொறுமை இடைவிடாத உழைப்பு—இவைதான் மறுபடியும் அவருக்கு முதல்வர் பதவியைத் தேடித்தந்துள்ளன.

தமிழக மக்களும் பாராட்டுக்கு உரியவர்களே.

எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை அமையாத நிலை வந்தால் அந்தக் குழப்பத்தை நாடு தாங்காது என் பதை உணர்ந்து, ஜெயிக்கும் கட்சியைச் சந்தேகத்துக்கு இட மின்றி ஜேஜே என்று ஜெயிக்க வைத்து விட்டார்கள்.

கருணாநிதி அரசியலில் பல மேடு பள்ளங்களைத் தாண்டி வந்தவர். நல்லது கெட்டது அறிந்தவர். அந்த மறக்க முடியாத அனுபவங்கள் அவருக்கு நிச்சயம் உதவி செய்யும்.

அவரது தேர்ந்த தலைமையின் கீழ் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் காணும் என்று எதிர்பார்க்கலாமா?

— குமுதம்
2.2.'89

வாழ்க! வளர்க!

21-1-1989 அன்று நடந்த தமிழகச் சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அறுதியான பெரும்பான்மை பெற்று அமைச்சரவை அமைக்க வுள்ளது. தலைவர் கலைஞர், டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் ஆட்சித் திறன்மிக்கவர்; எல்லோரையும் அணைத்துச் செல்வதில் வல்லவர். கலைஞர் அவர்களின் தலைமையில் அமையும் அமைச்சரவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் விழிப்பாய் நின்று தமிழகத்தில் கெட்டியான மற்றும் கெட்டிக்காரத்தனமான ஆட்சியை நடத்தும்; நல் லாட்சியாக அது அமையும் என்பதில் அய்யம் இல்லை.

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அவரின்—அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்து, பெரிதும் போற்றத்தக்க வகையில் பணிபுரிந்தவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள். அறிஞர் அண்ணா 3-2-1969-ல் இறையடி எய்தியபோது தமிழகஆட்சி என்னவாகுமோ என்ற ஏக்கமும் தேக்கமும் சூழ்ந்த நிலை யில் அப்பெரும் பொறுப்பை ஏற்று அண்ணாவுக்குப் பின் தமிழக முதல்வரானார் கலைஞர். அவர்களிடம் அண்ணா வின் இளகும் இதயமும், காமராசரின் கர்மவீரப் பண்பும், இராஜாஜியின் ஆட்சித் திறனும், பெரியாரின் சீர்திருத்த உள்ளமும், காந்தியடிகளின் உறுதியான மனமும் ஒருங்கே அமைந்துள்ளன. எனவே, இன்றைய தமிழக ஆட்சி எல்லா வகையிலும் சிறந்த ஆட்சியாய்த் திகழும் என்பது உறுதி.

தலைவர் கலைஞர் அவர்கள் வழிபடுவோரை வல்ல றிந்து கொள்ளும் நல்லவர்; பிறர்பழி கூறுவோர் மொழி களைத் தேர்ந்து முடிவு காண்பதில் திறன்மிக்கவர்;தொழுத கையுளும் படையொடுங்கும் என்ற தெளிவினர்; எண்ணித் துணிவதில் நிகரற்றவர்; கேட்டாரைப் பிணிக்கவல்ல பேச் சாளர்; கருமம் சிதையாமல் கண்ணோட்டம் செலுத்தும் திறனாளர். இவர் தலைமையில் அமையப் போகும் அரசு, தமிழகத்தில் தொழில் வளர்ச்சியிலும் கல்விச் சிறப்பிலும், இளைஞர்களை ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் முயற்சியிலும் சிறந்து விளங்கும். தமிழகம் ஏனைய மாநிலங்கட்கு ஒளிவிளக்காய் அமைந்து, வளத்தின் வாயிலாக அமைதியையும் மகிழ்ச்சியையும் உருவாக்கும் என்று உறுதியாக நம்பி, அமைய உள்ள அரசினை வாழ்த்து கின்றோம்.

— கலைக்கதிர்
பிப்ரவரி'89



மீண்டும் முதல்வராக...

அரசியல் உலகில் தம்முடைய இளம்பிராயம் முதல் அடியெடுத்து வைத்துத் தம்மை இந்தத் தமிழக வரலாற்றில் ஓர் அங்கமாக்கிக் கொண்டவர் கலைஞர் மு. கருணாநிதி. அவருடைய நேசமும், பாசமும் பல்வேறு சரித்திரங்களை உருவாக்கியிருக்கின்றன.

ஏதோ சில காரணங்களாலும், சூழல்களாலும் அவரது தொடர்ந்த தொண்டுக்குத் தமிழகம் ஓர் இடைவேளையைக் கொடுத்திருந்தாலும் மீண்டும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்கிற உணர்விலிருந்து அவர் மனம் எப்போதும் ஓய்ந்திருக்கவில்லை. எனவே தான் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருக்க அவரை இந்நாட்டு மக்கள் ஏற்றி வைத்துப் போற்றுகின்றனர்.

கடுமையான உழைப்பும், காலம் அறிந்த செயற்பாடு களும், மனத் திண்மையும் இருப்பவர்களுக்கு வெற்றி என்பது கைக்கு எட்டாத கனி அல்ல. கலைஞர் அவர்களுக் கும், அவர் சார்ந்திருக்கும் கட்சியின் நெஞ்சுரம் கொண்ட செயல் மறவர்களுக்கும் காலம் அண்மையில் தெளிவுபடுத்தி யிருக்கும் வரலாறு இதுதான்.

நேசத்தாலும், பாசத்தாலும் மக்களை நெருங்கி நின்று பார்க்கிற தலைவராக ஆட்சி பீட முதல்வராக—தமிழ கத்தை அலங்கரிக்கும் கலைஞர் அவர்களை 'மங்களம்' குடும்ப வார இதழ் தன்னுடைய முகப்பில் அலங்கரித்துப் பெருமிதம் கொள்கிறது.

மீண்டும் முதல்வராகியிருக்கும் அன்னாருக்கு எங்களது வாழ்த்துக்களையும் இணைத்துக் கொள்கிறோம்.

— மங்களம்
8.2.'89

தேர்தல் தீர்ப்பு தெரிவிப்பது

முதலில் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்!

''நாலு அணியாகப் போட்டியிடுகிறார்களே! யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், நிலையான அரசு அமையாதே! நாட்டின் முன்னேற்றம் தடைப்படுமே'' என்று பலரும் பயந்ததற்கு மாறாக—

தி.மு.க. வைப் பெரும்பான்மையாக வெற்றி பெறச் செய்து, உறுதியான ஆட்சி அமைய மக்கள் வழிசெய்து விட்டார்கள்!

கூட்டத்துக்கும் ஓட்டுக்கும் தொடர்பு இல்லை என்பதும் இந்தத் தேர்தலில் தெரிந்துவிட்டது.

யார் வந்தாலும் மக்கள் கூட்டம் அலைமோதியது!

ஆனால், தேர்தல் முடிவு தெளிவாக இருக்கிறது!

தானாக வந்த கூட்டம், பாதி! விலைக்கு வாங்கப்பட்ட கூட்டம் மீதி! அதனால்தான் கூட்டத்துக்கும், ஓட்டுக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது!

''எம். ஜி. ஆர். ஒன்று, நாங்கள் ஒன்றுக்குப் பின்னே இருக்கும் பூஜ்ஜியங்கள். அந்த ஒன்று இல்லாவிட்டால், நாங்கள் வெறும் பூஜ்ஜியங்களே!'' என்று அதிமுக தலைவர்கள் கூறிக்கொள்வது உண்டு. இது முழுக்க முழுக்க உண்மை என்பது இப்பொழுது முற்றிலும் உறுதி செய்யப்பட்டுவிட்டது!

அது மட்டுமா!

கருணாநிதியின் கதை முடிந்துவிட்டது என்று சில பேர் நினைத்தார்கள்.

ஆனால், அந்தத் தோல்விகளை வெற்றிக் கோபுரத்தின் படிக்காட்டுகளாக அவர் ஆக்கிக் கொண்டார்.

கருணாநிதி நீற்றுப் போன சாம்பல் அல்ல; நீறுபூத்த நெருப்பு என்பது இத்தேர்தலில் தெளிவாகிவிட்டது!

— ராணி
5.2.'89

ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி

நடந்து முடிந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்று நிலையான, உறுதியான, ஊக்கமான ஆட்சியை அமைக்கவிருக்கிறது. தி.மு.க. மாநில சுயாட்சிக்குக் குரல் எழுப்பிய கட்சி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனத் தமிழ்மொழிக்குப் புத்துயிரூட்டிய, புனருத்தாரணம் செய்த கட்சி தி.மு.க. அடக்குமுறைகளை, ஆணவ அகங்காரங்களை, பழிவாங்கும் படலங்களை முறியடித்து, எதிர்நீச்சல் போட்டு வெற்றி வாகை சூடிய கட்சி தி.மு.க. ஏழைகளின் துணைவனாக, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக, சமத்துவ, சகோதரத்துவ, சமதர்ம சமுதாயத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்து வீறு நடை போட்டுவரும் கட்சி தி.மு.க.

இந்திய அரசியல் வரலாற்றில் பெரும்பாலும் காங்கிரஸ் கட்சிதான் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மையைப் பயன் படுத்திக் கொண்டு, சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று, பெரும்பான்மையான இடங்களைப் பிடித்து ஆட்சி அமைப்பது வழக்கம். இது பெரிய ராஜதந்திர செயல்முறை. இதே செயல்முறையையே தி.மு.க.வும் பின்பற்றியிருக்கிறது.

அகில இந்திய அளவில் தமிழகத்தில் தி.மு.க.வுக்கு கிடைத்த பெரும் வெற்றி தேசிய முன்னணிக்கு மிகுந்த உற்சாகமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தென் இந்தியாவிலுள்ள நான்கு மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி அஸ்தமித்து விட்டதையடுத்து, தேசிய முன்னணி வட இந்திய மாநிலங்களிலும் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்துவிட முடியுமென்ற புதிய நம்பிக்கையுடன் இந்த ஆண்டு (1989) இறுதிக்குள் நடக்க வேண்டிய நாடாளுமன்ற தேர்தல்களைச் சந்திக்கும்.

சட்டமன்றத்தில் கிடைத்துள்ள பெரும்பான்மை பலத்தை மட்டும் கருதாமல் தமிழக மக்களிடம் கிடைத்துள்ள ஆதரவின் அளவையும் கவனத்தில் கொண்டு, அந்த ஆதரவு தற்காலிகமானதுதான் நிரந்தரமானதல்ல என்பதை மனதில் கொண்டு தி.மு.க. அரசு செயல்படும் என்று நம்புகிறோம்.

— உங்கள்
விசிட்டர்
5.2.'89

மக்கள் தீர்ப்பு

சுமார் ஒரு கோடித் தமிழர்கள், தங்கள் வாக்குகளைக் கலைஞர் கருணாநிதிக்கு அளித்து, அவரைத் தங்கள் முதலமைச்சராகச் சரியான நேரத்தில் தேர்வு செய்துகொண்டிருக்கிறார்கள். மக்கள் எப்போதுமே தவறு செய்வதில்லை. இந்தத் தேர்தலிலும், பகுத்தறிந்து சிந்தித்து, மிகச் சரியாகத் தங்கள் மகத்தான, பொறுப்புகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்! இந்தத் தீர்ப்பு 1967-ம் ஆண்டுத் தீர்ப்பை நிகர்த்தது.

— நக்கீரன்
8.2.'89

Δ Δ Δ

வெற்றி யாருக்கு?

பொழுது போக்குக்காக சினிமா எடுப்பவர்களும். பத்திரிகை நடத்துபவர்களும் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகிற அறியாமை இருளில் தமிழகம் இன்று இல்லை என்று வெளிசசம் போட்டுக் காட்டி விட்டன தேர்தல் முடிவுகள்.

'நான்தான் முதல்வர்' என்று சொல்லிக் கொண்டவர்களுக்குப் புத்தி புகட்டும் வகையில், தமிழக வாக்காளர்கள், 'அதை முடிவு செய்ய வேண்டியது நாங்கள்' என்று கூறி விட்டனர்.

வெற்றி தமிழ் மக்களுக்கே!

— சாவி
1.2.'89

Δ Δ Δ

கலைஞர் சபதம் நிறைவேறியது

தமிழகத்தில் தி.மு.க. பெற்ற வெற்றி—இந்திய அரசியலில் மாற்றம் ஏற்படுத்தும் என்கிறார்கள். எனில்.....அதில் கலைஞர் பங்கு நிச்சயம் இருக்கும்!

— ஜூனியர் விகடன்
1.2.'89

புதிய அமைச்சரவை


இன்று தமிழகத்தில் முதலமைச்சராகப் பதவி ஏற்றி ருக்கும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை வரவேற்போம்.

'எங்கள் கட்சிக்கு மீண்டும் வாய்ப்புத் தாருங்கள்' என்று கலைஞர் கேட்டதற்கு ஏற்ப மக்கள் தீர்ப்பை வழங்கி விட்டார்கள்.

மைய அரசுடன் இணக்கம், ஈழப் பிரச்சினை. தஞ்சைக் குக் காவிரி நீர், சென்னைக்குத் தெலுங்கு கங்கை, புதிய தொழில்கள் ஆரம்பித்தல் இவை எல்லாம் அவர் எதிரே வுள்ள பிரச்சினைகள்.

பயிலும் மொழி குறித்த பிரச்சினையும் முன்னே நிற்கப் போகிறது. இனி அவர் தோள்களிலே பெரும் பொறுப்பு ஏற்றப்பட்டுள்ளது. சென்ற பதின்மூன்று ஆண்டுகளாக அவர் எதை எதைக் குறை கூறினாரோ, அவை எல்லாம் அவர் எதிரே இன்று நிற்கின்றன.

அடக்கமான அமைச்சரவை, வீண் செலவுகள் செய் யாமை, 'இலஞ்சம்' என்ற பேச்சையே-சொல்லையே அகராதி யிலிருந்து எடுத்தல், கட்சியாளர்கள் தலையிடுவதைத் தடுத்தல், உட்பூசல்களை வளர விடாமை, இந்து மத அற நிலையத்தை அறவோர்களிடம் அளித்து நிர்வகிக்கச் செய்





தல் போன்ற பணிகளைத் திறம்பட ஆற்றி நாட்டுக்கு நன்மை செய்வார் என்று வாக்களித்த மக்களும் எதிர் பார்க்கிறார்கள்.

அவருக்கு வாக்களிக்காதவர்களும் போதிய அவகாசம் கொடுத்துப் பொறுமையாக இருத்தல் அவசியம்.

குறிப்பாக நாம் அடிக்கடி கூறி வந்தது போன்ற இலக்கிய வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் பரிசு-பாராட்டுதல்கள் இவற்றில் இதுவரை இருந்த தேக்க நிலையை உடனே சரிசெய்ய வேண்டும்.

தேர்தல் காலத்தில் ஒருவருக்கொருவர் இலஞ்சக் குற்றச்சாட்டைக் கூறி அழுக்குத் துணியை அம்பலப்படுத்தி அலசியதைக் கண்டு பொதுமக்கள் மிக வெறுப்படைந்திருக் கிறார்கள்.

அரசு, அரசியலுக்குப் புதுப் பொலிவையும், அர சியல்வாதிகளுக்குப் புது அந்தஸ்தையும், மரியாதையையும் ஏற்படுத்த வேண்டும்.

நூல் நிலையங்களில் தக்க நூல்களை வாங்குவது, தமிழக மெங்கும் நூல் நிலையங்களுக்காகக் கட்டடங்கள் கட்டுதல், ஒவ்வொரு நூலகத்திற்கும் புதிய நூல்கள் வாங்கு தல் இவற்றில் புதிய அரசு அதிக அக்கறை காட்டும் என நம்புவோமாக.

— அமுதசுரபி
பிப்ரவரி' 89

வாழ்த்துகிறோம் — வரவேற்கிறோம்

மலைபோல் மன உறுதி—
சளைக்காத உழைப்பு—
வானளவு சொற்பெருக்கு....

கலைஞரின் இந்த மூன்று தன்னிகரில்லா முத்திரைகள் தான் தி.மு.க.வை ஆட்சிக் கட்டிலில் மீண்டும் அமரவைத்திருக்கின்றன.

கலைஞரின் இந்த உழைப்பு அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்ல; ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருந்தால் வெற்றிக்கனி தானே பழுத்து மடிமீது விழும்!

நாட்டின் தேவையை உணர்ந்து ஆட்சியை ஒப்படைப்பதில் இந்திய வாக்காளர்களுக்கு— குறிப்பாக, தமிழக வாக்காளர்களுக்கு கூர்த்த மதிநுட்பம் எப்போதுமே உண்டு.


தமிழக கஜானாவில் மெலிந்த நிலை— —


கடந்த மக்களாட்சியின் இறுதி நாட்களில் ஏற்பட்ட நிர்வாக ஸ்தம்பிதம்—

ஆமை வேகத்தில் நடைபோட்ட திட்ட வளர்ச்சி நிலைகள்—

இவை மாற்றப்பட்டு, மீண்டும் புதிய உத்வேகத்தோடு ஆட்சிச் சக்கரம் சுழற்றப்பட திறமையான ஒருவர்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டுக்குத் தேவை என்பதை மிகச் சரியாகத் தமிழக மக்கள் உணர்ந்ததன் வெளிப்பாடுதான் கலைஞரின் தலைமை பெற்ற வெற்றி!

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்தபோது டி.வி. டெல்லி ஒளிபரப்பு தேர்தல் விமரிசனத்திலும், தமிழக ஒளிபரப்பு தேர்தல் விமரிசனத்திலும் கலைஞரின் நிர்வாகத் திறனைப் பற்றி வானளாவப் புகழ்ந்தனர் விமரிசகர்கள். கலைஞர் மட்டும் உத்திரப் பிரதேசத்தில் பிறந்திருந்தால் இந்திய அரசியலின் சூத்ரதாரியாக விளங்கி இருப்பார்என்ற பல அரசியல் விமரிசகர்களின் விமரிசனம் மிகைப்படுத்தப் பட்ட ஒன்று அல்ல!





தமிழக அரசு அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்டுள்ள (கலைஞர் வெற்றியில்) மகிழ்ச்சி, கடந்த காலத்தில் கலைஞர் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தியவர் என்பதை உறுதிப் படுத்துகிறது.

தமிழக மக்களுக்கு நல்ல-நேர்மையான ஆட்சியை வழங்குவோம் என்று கலைஞர் அளித்துள்ள உறுதிமொழி நடுநிலையாளர்களின் உள்ளங்களில் நம்பிக்கையை ஏற் படுத்தி உள்ளது.

எந்தவொரு கட்சியும் ஆளும் பொறுப்பை ஏற்கும் போது அக்கட்சியில் உள்ள ஒருசிலர் ஆட்சியில் தலையிட்டு அவப்பெயரை அந்த ஆளும் கட்சிக்கு வாங்கித்தரும் வாய்ப்பு உள்ளது. அப்படிப்பட்ட சுயநல சக்திகள் தலையெடுக்கா மல் பார்த்துக் கொள்ளுங்கள். அவை வளரும் பட்சத்தில் களையெடுக்கத் தயங்காதீர்கள்! நல்லவர்கள்-சாமான்ய மக்கள் உங்களுக்குத் துணை நிற்பார்கள் என்பது நிச்சயம்.

நிர்வாக அனுபவம் பெற்ற பேராசிரியர், சாதிக் பாட்சா, நாஞ்சில் கி. மனோகரன் போன்ற மூத்தவர்களை யும், திறமையோடு செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை யோடு இளைஞர்களையும் கலந்து கலைஞர் அமைத்துள்ள மந்திரிசபை விரைந்த வளர்ச்சியை தமிழகத்துக்குக்கொண்டு சேர்க்கும் என்ற நம்பிக்கையோடு கலைஞரையும் அவரது அமைச்சரவை சகாக்களையும் வாழ்த்துகிறோம்-வரவேற் கிறோம்.

— இதயம் பேசுகிறது
பிப்ரவரி 5-'89

மக்கள் மன்றம் வழங்கிய தேர்தல் தீர்ப்பு

நிலையான ஆட்சி அமைய இம்முறையும் குழப்பமின்றி வாக்களித்து, தங்களின் அரசியல் தெளிவை உறுதிப்படுத்தி யுள்ள தமிழக வாக்காளர்கள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்!

கம்ப்யூட்டர் கணிப்பென்றும் ரகசிய வாக்கெடுப்பு என்றும் ஒவ்வொரு பத்திரிகையும் இந்தத் தேர்தல் வெற்றியைக் கணிப்பதற்கு முன்பே—தேர்தல் பிரச்சாரம் துவங்கப்படும் முன்பே—முஸ்லீம் முரசு ஜனவரி 89 இதழில் அடுத்த முதல்வர் யார்? என்பதை மிகத்தெளிவாக நாம் எழுதியிருந்தோம்.

'இந்தத் தேர்தலில் தி.மு.க. அறுதிப்பெரும்பான்மை பெற ஒளிமயமான வாய்ப்பு காத்திருக்கிறது' என்று நாம் எழுதியபடியே தேர்தல் முடிவும் அமைந்துள்ளது.

தி.மு.க. வின் இந்த அபரிதமான பெரு வெற்றிக்கு கலைஞரின் தெளிவான ஆதாரப் பூர்வமான செறிவான பேச்சும் நிதானமான நுணுக்கமான செயல்முறையும்அதற்கு வலுவூட்டும் வண்ணம் அமைந்த தொண்டர்களின் அயராத உழைப்பும், சுறுசுறுப்புமே காரணம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

முஸ்லீம்களின் ஆதரவு கலைஞருக்கே என்பதையும், இந்தத் தேர்தல் முடிவு வெகு துல்லியமாக நிரூபித்திருக் கிறது. முடிவு இப்படித்தான் அமையப் போகிறதென்பதைத் தெளிவாக உணர்ந்திருந்ததால்தான் இத்தேர்தலில் முஸ்லீம் லீக் எடுத்த முடிவு தவறானதென்பதை டிஸம்பர் 88 இதழிலேயே அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

'1977 தேர்தலில் தி.மு. கழகத்துடனான உறவைத் துண்டித்துக்கொண்டு சமுதாய மக்களின் வெறுப்புக்கும் பெருந்தோல்விக்கும் ஆளான முஸ்லீம்லீக் அந்த வடுவை மறந்துவிட்டு மீண்டும் ஒருமுறை விஷப்பரீட்சையில் இறங்கி யிருக்கிறது. 1977-ல் உறவை முறித்தது விபத்து! இப்போது முறித்துக் கொண்டிருப்பது ஆபத்து.'—டிஸம்பரில் இவ் வாறு நாம் எழுதிய கருத்து சரியானதே என்பதை மக்கள் மன்றம் வழங்கிய தேர்தல் தீர்ப்பும் உறுதிப்படுத்தியிருக் கிறது.

— முஸ்லிம் முரசு
பிப்ரவரி'89

கழக ஆட்சிக்குச் சில வார்த்தைகள்

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி மலர்ந்திருக்கிறது. தி.மு.க. வுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி மாபெரும் வெற்றி. தமிழக மக்கள் விழித்துக் கொண்டார்கள். இனியும் அவர்களை யாரும் ஏமாற்ற முடியாது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளாக எம். ஜி. ஆர். ஆட்சியில் தனிப்பட்ட ஒரு மனிதரின் கவர்ச்சியால்—சினிமாக் கவர்ச்சியால் தமிழக அரசு ஓடிக்கொண்டு இருந்தது. ஊழல்கள் மலிந்து விட்டன. நிர்வாகம் செயலற்றுவிட்டது என்றெல்லோரும் எண்ணும்படியாக நிலைமை ஏற்பட்டிருந்தது. தமிழக அரசின் பொருளாதார நிலைமைகூட மிகவும் மோசமாகிவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார் கருணாநிதி.

இந்த நிலையில் கழகம் ஆட்சிக்கு வந்ததும். அது அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை மறந்துவிடக் கூடாது. நிராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்த முடியாத வாக்குறுதிகளைத் தரவில்லை.

தி.மு.க. பதவிக்கு வந்தால் ஏழைகளுக்கு முக்கியப் பண்டிகை நாட்களில் ஐந்து கிலோ அரிசியை இலவசமாகத் தருவோம் என்றது. இதைச் செய்ய முடியும். செய்கிறதா பார்ப்போம்.

ஊழலற்ற ஆட்சியை அமைப்போம் என்றார் கருணாநிதி. தமிழகத்தில் ஊழல்கள் மலிந்து விட்டதைப் போல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பது சில அரசியல் வாதிகளின் கணிப்பு. எம். ஜி. ஆர். ஆட்சியில் ஊழல்கள் அரசு அலுவலகங்கள் மட்டுமின்றி, அமைச்சர்கள் வரை மிகுந்து விட்டன என்பதை மக்கள் உணர்ந்திருந்ததால்தான் நடந்து முடிந்த தேர்தலில் திருநாவுக்கரசு மற்றும் கே. கே. எஸ். எஸ். ஆரைத் தவிரப் போட்டியிட்ட அமைச்சர்கள் அனைவரும் படுதோல்வியடைந்தார்கள். இந்த உண்மையை கருணாநிதி—உணராதவர் அல்ல, அனுபவமிக்க அரசியல் வாதி. விபரம் தெரிந்தவர். பன்னிரண்டு ஆண்டுகள் பதவி இல்லாத போதும் கழகத்தின் தலைமை ஏற்றுக் கட்சியைக் கட்டிக் காத்தவர். கொள்கைகளை விட்டுக் கொடுக்காதவர் ஊழல் விஷயத்திலும் இந்த உறுதியைக் காட்டுவாரா பார்ப்போம்.

சத்துணவுத் திட்டத்தை மேலும் சிறப்பாக அமல் படுத்த முடியும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஏழைகளுக்கு இலவசமாகச் சேலைகளும் வேட்டிகளும்

கிடைக்கும் என்றார்கள். ஆண்டு ஒன்றுக்கு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பினை உண்டாக்குவோம் என்பதும் ஒரு வாக்குறுதி. மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்லூரி வரையில் இலவசப் படிப்புக்கு ஏற்பாடு செய்வதாகவும், அரசு வேலைகளில் சேர விரும்புவோரின் வயது வரம்பை 30 ஆக உயர்த்துவதாகவும் கூறியிருக்கிறார்கள். எட்டாவது வகுப்புக்கு மேல் படித்த பெண்களுக்கு மணம் செய்து கொள்ள 5,000 ரூபாய் வழங்குவதாகவும் கூறியிருக்கிறார்கள். இதனால் பெண்கள் படிப்பில் ஆர்வம் செலுத்துவார்கள். அதே நேரத்தில் அரசு வேலைகளில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் வாங்கிய கடனை இரத்து செய்வதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய தொழில்களைத் தொடங்கி வளர்ச்சியை விரைவுபடுத்தப் போவதாகவும் வாக்குறுதி அளித்து உள்ளார்கள்.

தமிழக மக்கள் அனுபவம் பெற்ற வாக்காளர்களைப் போல் நிலையான ஓர் ஆட்சியை அமைக்க தி.மு.க. வுக்கு வாக்களித்துப் பதவியில் உட்காரவைத்திருக்கிறார்கள்.

கருணாநிதி பதவிக்கு வந்ததும் பாரபட்சமின்றி, வாக்களித்தவர்கள். வாக்களிக்காதவர்கள் அனைவரையும் சமமாகக் கவனித்துச் செயலாற்றுவேன் என்கிறார். தேர்தல் வாக்குறுதிகளை, குறிப்பாக ஊழலற்ற ஆட்சியை அமைப்பேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

மாநில அரசு மத்திய அரசுடன் மோதுவதைத் தவிர்க்க வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்என்று கேட்கப் போவதாகக் கூறுகிறார் கருணாநிதி. ஆனால் மத்திய அரசுடன் நல்லுறவு வைத்துக் கொண்டால்தான் பிரச்னைகளுக்கு முடிவுகள் காண முடியும். இதை இப்போது உணர்ந்திருக்கிறார் கருணாநிதி. 'மத்திய அரசுடன் மோதலைத் தவிர்ப்பேன்' என்று ஒரு பேட்டியில் கூறியிருப்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழகம் படுத்துவிட்ட யானையைப் போல் இருக்கிறது அது எழுந்து நிமிர்ந்து நிற்க வேண்டும். கழக ஆட்சியின் பொறுப்பு அது. தமிழக மக்கள், தி.மு.க.விடம் நம்பிக்கை வைத்து, அரசு, இயந்திரத்தை முடுக்கிவிடும்; முடிவு எடுக்கப் படாத பிரச்னைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் என்றெல்லாம் நிறைய எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கழக ஆட்சி செய்யும் என்று எதிர் பார்க்கலாமா.

— கல்கண்டு
9.2.'89

வெற்றியிலும் ஒரு படிப்பினை

தமிழ்நாடு முழுவதும் அரசியல் நிலை, மக்கள் மனநிலை குறித்து 'தேவி' இதழின் கணிப்பு, சட்டசபைத் தேர்தல் முடிவுகளுடன் பெருமளவுக்குப் பொருந்தி வந்துள்ளது. தி.மு. கழகத்துக்கு 125 இடங்கள் வரை நிச்சயம் கிடைக்கும் என்று 'தேவி' கணித்துக் கூறியதையும் கடந்து கழகம் மகத்தான வெற்றியைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பை எற்கிறது.

ஒரு விதத்தில் தி.மு. கழகத்துக்கு ஆதரவான அலை கண்ணுக்குத் தெரியாத நீரோட்டம் போல இருந்திருக்கிறது என்பதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன.

ஆட்சிப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட பிறகு 14 ஆண்டுகால நீண்ட இடைவெளிக்குப் பிறகு தி.மு. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இல்லாத இந்தக் கால கட்டத்தில் தி.மு. கழகம் சிதைந்து போய் விடாமல், சோர்ந்து போய்விடாமல், விடா முயற்சியுடன் மக்கள் பிரச்சினைகளில் ஆற்றல் மிகுந்த எதிர்க்கட்சியாக வாதாடி, இப்போது தேர்தலையொட்டி பல வாக்குறுதிகளை அளித்து மீண்டும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் ஈழத் தமிழர்களின் பிரச்சினை இந்த நூற்றாண்டிலேயே தமிழ்ச் சமுதாயம் மிக்க வேதனையுடன் சந்தித்துத் கொண்டிருக்கும் மனக்குமுறல் நிறைந்த பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினையில் ஈழத் தமிழர்கள் அமைதியுடனும் கண்ணியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் விடுதலைப் புலிகளை இந்திய அரசு பேச்சு வார்த்தைக்கு அழைத்து நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியில் தி.மு.கழக அரசு ஈடுபடவேண்டும்.

ஈழத் தமிழர்கள் தங்கள் நல்வாழ்வுக்கு விடிவு காலம் பிறக்காதா என்று கலைஞர் கருணாநிதியின் மீதும் தி.மு.கழகம் மீதும்தான் தங்கள் கடைசி நம்பிக்கையை வைத்துள்ளனர். எனவே இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை, கலைஞர் மீது காலம் சுமத்தியுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழக மக்களின் பரவலான நம்பிக்கைதான் இன்று தி.மு. கழகம் அடைந்துள்ள வெற்றிக்கு அடையாளம். அக்

கட்சியை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி இருப்பதுவும் மக்கள் நம்பிக்கையின் விளைவே.

அந்த நம்பிக்கை கைகூட வேண்டும்; மக்களின்வாழ்வை வளமாக்கி, தமிழகத்தை நல்ல எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தி.மு.கழகம் நல்லாட்சி நடத்திட வேண்டும். அதுதான் தமிழ்நாட்டுக்கும் திராவிட இயக்க வரலாற்றுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

—தகி
1-2-89





வாக்காளர்கள் வழங்கியுள்ள 2 வெற்றிகள்

'நன்றி'—மூன்று தமிழ் எழுத்துகள் ஒன்றாக இணைந்து உருவான ஆழமான தமிழ்ச் சொல் இது! இந்தச் சொல்லின் உள்ளே எவ்வளவு பொருளைத் திணிக்க முடியுமோ அவ் வளவு பொருளைத் திணித்து—இந்தச் சொல்லில் எவ்வளவு உணர்வை ஏற்ற முடியுமோ அவ்வளவு உணர்வை ஏற்றித் தமிழக வாக்காளப் பெருமக்களின் காலடியில் படைக் கிறோம் நாம்!

'வெற்றி'—மூன்று தமிழ் எழுத்துக்கள் ஒன்றாக இணைந்து உருவான இனிப்பான தமிழ்ச் சொல் இது! இதற்கு முன் இந்தச் சொல் இனித்த இனிப்பைவிட இன்று இனிக்கும் இனிப்பு இரட்டிப்புச் சுவை படைத்திருக்கின்றது!

'தோல்வி'—மூன்று தமிழ் எழுத்துகள் ஒன்றாக இணைந்து உருவான கசப்பான தமிழ்ச் சொல் இது! இதற்கு முன் இந்தச் சொல் மாற்று அணியினருக்கு வழங்கிய கசப்பை விட இப்போது ஏழு மடங்கு கசப்பினை வழங்கிக்கொண் டிருக்கின்றது!

வெற்றிக்கு இரட்டிப்பு இனிப்புச் சுவை வந்தது எப்படி? இந்தத் தேர்தலில் தமிழக வாக்காளர்கள் வழங்கிய தீர்ப்பு இரட்டைத் தீர்ப்பு ஆகும் (1) தமிழகத்தை அடுத்து வரும் ஐந்தாண்டுகளுக்குத் தி.மு. கழகமே ஆள வேண்டும். (2) தி.மு. கழக ஆட்சி கலைஞர் தலைமையில் மலரவேண்டும்.

வெற்றியின் போதை தலையினுள் ஏறிவிடாதபடி பொறுப்புணர்ந்து அடக்கமாக நடக்குமாறு தி.மு. கழகத் தினருக்குக் கலைஞர் விடுத்திருக்கும் வேண்டுகோளின் மறு பக்கத்தை நாம் இங்கே திருப்பிக் காட்ட விழைகிறோம். மாற்று அணியினர் தோல்வியால் துவண்டு போகாமல் கசப்பும் கூட ஒரு சுவையே என்று உணர்ந்து தமிழக மக்களின் இதயப் பாங்கினைப் புரிந்து தமிழ் இன முன்னேற்றத்திற்கும் தமிழ் மொழிப் பாதுகாப்புக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் ஆளுங்கட்சியுடன் ஒத்துழைக்க முன் வாருங்கள்! அதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு நீங்கள் செலுத்தும் மரி யாதை—தமிழக மக்களுக்கு நீங்கள் காட்டும் நன்றியுணர்வு!


— தினகரன்
24.1.'89

செம்மையான நிருவாகம்

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, மீண்டும் மக்களாட்சி மலருவது மகிழ்ச்சி தருகிறது. சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான அணிக்கு சட்டசபையில் மூன்றில் இருபங்கு இடங்களை அளித்து, மக்கள் தெள்ளத் தெளிவாக அளித்திட்ட தீர்ப்பின் மூலம் தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைவதற்கு வழிவகுத்துள்ளது.

தி.மு. கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். பிரிந்து சென்று, அண்ணா தி.மு.கழகம் கண்ட பிறகு 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில், அண்ணா தி.மு. கழகமே வெற்றிவாகை சூடி வந்துள்ளது. எம். ஜி. ஆர் இருந்தவரையில் தி.மு. கழகம் தேர்தல்களில் குறிப்பிடத் தக்கவகையில் எதையும் சாதிக்க முடியவில்லை. 1977-இல் 48 இடங்களைப் பெற்ற தி.மு. கழகம், 1980-ல் 38 இடங்களையும், 1984-ல் 22 இடங்களையும் பெற முடிந்தது. இப்போது எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின்னர், தமிழ் நாட்டில் ஆட்சி செய்யும் பொறுப்பை கருணாநிதி தலைமையிலான தி.மு.க. விடம் மக்கள் மீண்டும் ஒப்படைத்துள்ளனர்.

ஆட்சிப் பொறுப்பைப் பெற்றதும், புதிய அரசின் முதல் நடவடிக்கை என்ன என்பதைக் கருணாநிதி சொல்லியிருக்கிறார். தேங்கிக்கிடக்கும் நிருவாகத்தை முடுக்கிவிடுதல், நிருவாகத்தை செம்மைப்படுத்தி வேகப்படுத்துவதின் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, குடிப்பதற்கு நல்ல குடிநீர், இருப்பதற்கு வீடுபோன்றவைகளில் முழு கவனம் செலுத்துவதற்காக முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.





இன்றைய அரசு எந்திரம் பற்றி சாதாரண மக்களுக்கு மனநிறைவு கிடையாது. எங்கும் எதிலும் லஞ்ச ஊழல் மலிந்து விட்டது என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

கருணாநிதி பதவி ஏற்றதும், நிருவாகத்தை ஆட்டிப் படைக்கும் லஞ்சப் பேயை விரட்டி அடிக்க, உறுதியான நடவடிக்கை எடுத்தார் என்றால் மக்கள் பெரிதும் வரவேற் பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அரசுப் பணிகள் என்றாலே, வேகம் இருப்பதில்லை என்பது அனைவரும் அறிந்தது. ஆமை வேகத்தில் செயல் படும் அரசுஎந்திரம் முயல் வேகத்தில் முடுக்கிவிடப் படுவது அவசியம். மக்களின் பிரதிநிதிகளின் நேரடி மேற் பார்வையில் இதைச் செய்ய இயலும்.

பாமர மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான போர்க்கால ரீதியில் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியது அவசியம். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் ஏழை, எளிய மக்களின் நலனுக்காகப் பல திட் டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. அவற்றைச் செயல்படுத்த கருணாநிதி அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பை ஏற்று அனுபவம்மிக்க வர் கருணாநிதி. எனவே நெளிவு சுளிவுகள் நன்கு அறிந்த வர். 12 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு ஆட்சிப் பொறுப் புக்கு வந்துள்ள கருணாநிதியிடமிருந்து மக்கள் நிறையவே எதிர்பார்க்கிறார்கள். அவற்றை நிறைவேற்றித் தருவது கருணாநிதியின் பொறுப்பு.

— தினசரி
24.1.'89




தி.மு.க வெற்றி

தமிழக வாக்காளர் பெருமக்கள் தீர்ப்பளித்துவிட்டனர். திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் தேர்தலில் மகத்தான வெற்றிபெற்று அடுத்த அரசை அமைக்கப் போகிறது. ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்பே முடிவானது. அதையேற்று, தி.மு.க.விற்கும் அதன் தலைவர் கருணாநிதிக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகத்தில் நிலையான, வலுவான, நல்ல ஆட்சி அமைய வேண்டுமென்று வேண்டுகிறோம்.

சட்டமன்றத்தில் கிடைத்துள்ள பெரும்பான்மையை மட்டும் கருதாமல் மக்களிடம் கிடைத்துள்ள ஆதரவின் அளவையும் கவனத்தில் கொண்டு, அந்த ஆதரவைப்பெருக்கிக் கொள்ளும் வகையில் தி.மு.க. அரசு செயல்படும் என்று நம்புகிறோம்.

அகில இந்திய அளவில் தமிழகத்தில் தி.மு.க. விற்குக் கிடைத்த பெரும் வெற்றி, தேசிய அணிக்கு மிகுந்த உற்சாகத்தையளிக்குமென்பதில் சந்தேகம் இல்லை. தென்னிந்தியாவிலுள்ள நாலு மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி அஸ்தமித்துவிட்டதையடுத்து, தேசிய முன்னணி வட இந்திய மாநிலங்களிலும் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்துவிட முடியுமென்ற புதிய நம்பிக்கையுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் நடக்க வேண்டிய நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்திக்கும். ராஜீவ் காந்தி தாமே முன்னின்று தமிழகத் தேர்தலில் காங்கிரசிற்காகப் பிரச்சாரம் செய்ததால், இது அவருடைய சொந்தத் தோல்வியென்றுதான் கருதப்படும்.

— தினமணி
23.1.'89




தி.மு.க. வெற்றியும் தேசியப் பிரச்னையும்

திராவிட முன்னேற்றக் கழகம் நடந்து முடிந்த தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று தனித்தமிழர் அமைச்சரவையை அமைத்து விட்டது.

தமிழ்நாட்டில் காங்கிரசைப் பெரும் அளவில் தோற்கடித்துக் காட்டியதன் மூலம், தேசிய முன்னணிக்கு ஒரு பரவலான எதிர்பார்ப்பை இந்தியத் துணைக் கண்டத்துக்கு தி.மு.க. அளித்திருக்கிறது.

திராவிடர் இயக்கத்தைப் பற்றியும் திராவிடர் கலாச்சாரத்தைப் பற்றியும் எதிர்த்துத் தாறுமாறாகப் பிரதமர் ராஜீவ் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ்காரர்கள் பிரச்சாரம் செய்து பெரும் தோல்வியைச் சுமந்ததிலிருந்து உண்மையிலேயே திராவிடர் இயக்கத்திற்கும், கொள்கைக்கும் திராவிடர் கலாச்சாரத்திற்கும் கிடைத்திட்ட மாபெரும் வெற்றிதான் தி.மு.க. வெற்றி என்று கொள்வது தானே தர்க்க ரீதியானதாக இருக்க முடியும்.

— விடுதலை
6.2.89



Tasks before Karunanidhi

INDUSTAN TIMES JANUARY 29,

The Tiger who did not sleep

அரிமா ஏகுகின்

MR KARUNANIDHI, who ...s a well-... a firm and decisive adm... ...ator, ... Tamil Nadu at a time when the p... longing for a stable government th... before were corruption and stagnat... the end of the MGR era. The ... lobbies, illicit and licit, and a g... in the face of indiscipline an... brought people to the verge ... improve. Only strong ... confined merely to the ... relief. Ex... ample, mere ... into ... ...ng ... ...ugh... ...down... activi... nised. ... DMK manifesto, generally more realistic than those of the others, is committed to bringing about parity in ...pay scales between the Centre and the state which wi... ...mmediately mean a considerable extra revenue expe... ...ure. The question of co-operative loan arrears will ha... tackled. Expenditure on the noon-meal scheme ...ms set to rise. And yet no attempt to balance the ... ...ny hope of success unless revenue ... ...mental expenditure is kept under check. ... will test all of Mr. Karunanidhi's ... e real, long-term priority ... ...strial developmen... ...ready ...e need to scale ...r to stimulate industrial ...he state's wealth was rightly recog-

...unfortunately ...d.

...stance a... ...id not gi... ...ge with th... MGR swept the ...

...se ally in those days was ...end in the theatre —

...igh water mark of hi... ...career was in 1969 ...Congress split in Ne... ...and Indira Gand... ...caded a min... ...ment. She wa... ...on the DM...

தி.மு.க. பெற்ற பெருவெற்றியின் முக்கியத்துவம்

தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தையும். அதன் திறமைமிக்க தலைவர் திரு மு. கருணாநிதியையும் பெருவெற்றி பெறச் செய்து பதவியில் அமர்த்தியுள்ளனர். பிரதமர் திரு ராஜீவ்காந்தி இந்தத் தேர்தலின்போது 12 முறைகளுக்கு மேல் தமிழகம் வந்து இந்தத் தேர்தல் தமக்கும் தமது கட்சிக்கும் ஒரு சவால் என்பதுபோல் துணிகரமாகச் செயல்பட்டார். தி.மு.க. நான்குமுனைப் போராட்டத்தின் அமைப்புரீதியான பொருளையும், அரசியல் அர்த்தத்தையும் விளங்கிக்கொண்டு மாறியிருக்கும் மாநிலத் தேர்தல்களத்தின் விளையாட்டு விதிகளையும் திறம்பட உணர்ந்துகொண்டு, நிதானமாக - ஆனால் மிகச் சரியாகப் பந்தயத்தில் ஈடுபட்டு மிகப்பெரு வெற்றி பெற்றது.

இந்திரா காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க. (ஜெயலலிதா) ஆகியவற்றைவிட அது பெற்றுள்ள செல்வாக்கு மாநிலம் முழுதும் வெளிப்பட்டது. அதன் மூலம் தி.மு.க. வின் செல்வாக்கு நகர்ப்புறத்தில் மட்டும்தான் என்ற பொய்க்கும் கூட முடிவு கட்டப்பட்டது. தனது சொந்த அரசியல் அடித்தளத்தின் வலிமையுடனும், தன் வலிமையை அதிகரிக்கும் வகையில் தோழமைக்கட்சிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டும், அது மக்களைச் சந்தித்தது.

இந்தத் தேர்தலை, திராவிட மரபுக்கும், இந்திரா காங்கிரஸ் பிரதிபலிப்பதாகக் கருதிக்கொள்கிற தேசிய அரசியல் கலாச்சாரத்துக்கும் இடையிலே ஏற்பட்டுள்ள போர் என்று திரு ராஜீவ்காந்தி அறிவித்தார். வாக்காளர்கள் தங்கள் கருத்துக்கள், உணர்வுகள் எவை என்பதை நாட்டுக்குத் தெளிவாகவே விளக்கிவிட்டார்கள். இம்முறை வாக்காளர்கள் முதிர்ச்சி பெற்றவர்களாகவும், மேலும் மேலும் தேவைகளை நிறைவேற்ற வேண்டுகிறவர்களாகவும் இருப்பதை ஆளும் கட்சியினர் காணமுடியும்.

மலிவான வாக்குறுதிகள் இந்தத் தேர்தல் பிரச்சார வேளையில் அதிகமாகவே வீசப்பட்டன. ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடும்போது, தி.மு.க. மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்குவதிலும், வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் காட்டுவதிலும் வெகுநிதானமாகவே நடந்துகொண்டது.

— தி ஹிந்து
23.1.'89

ஒரு பெரும் பொறுப்பு

தி.மு.க. பெற்ற பெருவாரியான வெற்றி திரு மு. கருணாநிதிக்குக் கிடைத்த தனி வெற்றி. இந்த வெற்றி அவருக்குப் பெரும் பொறுப்பை அளித்துள்ளது.

கருணாநிதி பெற்றுள்ள வெற்றி எதிர்க்கட்சியினர்க்கும் ஏன் வாக்காளர்களுக்கும் பல பாடங்களைச் சொல்லி நிற்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம். அரியானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களின் ஆட்சிகளையும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள புதிய ஆட்சியையும் வாக்காளர்கள் இன்னும் கூர்மையாகக் கண்காணிப்பார்கள். அரியானா, ஆந்திர அரசுகள் கடந்த ஆண்டில் செல்வாக்கு இழந்திருக்கின்றன. இந்நிலையில், எதிர்க்கட்சி அரசொன்று சிறந்த ஆட்சியை வழங்க முடியும் என்று நாட்டுக்கு நிரூபிக்க வேண்டியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாகும்.

— இந்தியன் எக்ஸ்பிரஸ்
24.1.89



தமிழகம் தரும் எச்சரிக்கை

திராவிட இயக்கம் மீண்டும் எழுச்சி பெற்றுவிட்டதால் தான் தமிழ்நாட்டில் தனது வெற்றி வாய்ப்பை இழந்துவிட்ட தாக இந்திராகாங்கிரஸ் நம்பத் தேவையில்லை. திரு மு. கருணாநிதி ஒரு பிராந்தியக் கட்சியின் தலைவராக இருக்கலாம். ஆனால் அவரை இனியும் ஒரு பிரிவினைவாதி யாகக் கருதமுடியாது. முன்பு காங்கிரஸ் கட்சியின் தோழ ராகவும் அவர் இருந்தவர்தான். அரியானா, மேற்குவங்கம், கேரளா ஆகிய மாநிலங்களில் 1987இலும் கடந்த ஆண்டு அலாகாபாத்திலும் இந்திரா காங்கிரஸ் தோற்றது. இந்த மாநிலங்களில் இருந்தவை உள்ளூர்ப் பிரச்சினைகள் தானே தவிர, பிராந்திய இயக்கங்கள் அல்ல. ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் ஓர் அகில இந்தியக் கட்சியை வாக்காளர்கள்ஏன் ஒதுக்கித் தள்ளுகிறார்கள் என்பதற்கு ஏதோ காரணம்இருக்க வேண்டும். நாட்டுக்குவிடுதலை பெற்றுத்தந்து, விடுதலைக்குப் பின் நாட்டுக்கு ஒருநிலை பேற்றை நல்கி, பல்லாண்டுக்காலம் அதன் பணிகளில் முன்னின்ற ஒரு தேசியக்கட்சி தற்போது ஒவ்வொரு மாநிலமாக ஏன் தோற்கவேண்டும்?

தமிழ்நாட்டில் நிகழ்ந்திருப்பது 'ஒரு பிராந்திய நிகழ்ச்சிதானே' என்று கருதுவது இந்திராகாங்கிரசுக்கு அபாயமாக முடியும். எந்த மாநிலமும் தேசிய நீரோட்டத்தி லிருந்து விலகியிருப்பதில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளில் என்ன நிகழ்கிறதோ, அது தமிழக வாக்காளரின் கருத்தை உருவாக்கவல்லது. தமிழ்நாட்டின் வாக்குச் சாவடியில் ஒரு வாக்காளர் செய்யும் முடிவு, நாட்டின் ஏனைய பகுதிகளை யும் பாதிக்கலாம். இந்த நிலையானது இந்திரா காங்கி ரசைப் பொறுத்தவரை, தமிழகம் தரும் எச்சரிக்கையை இன்னும் அபாயமானதாக ஆக்குகிறது. கட்சியின் கட்ட மைப்பை ஒழுங்குபடுத்தி மறுபடியும் இந்திராகாங்கிரஸ் மக் களுக்காக மக்களுடைய கட்சியாக மாற்றப்படாவிட்டால் ஏனைய மாநிலங்களிலும் அது வாக்காளர்களால் ஒதுக்கப்பட லாம். இந்த எச்சரிக்கையைக் கவனிக்கத் தவறுவது, திரு ராஜீவ்காந்தியும் அவரது கட்சியும் அலட்சியப்படுத்த இய லாத சிக்கல்களை உருவாக்கும்.

— தி இந்துஸ்தான் டைம்ஸ்
ஜனவரி 24, 1989



தமிழ்நாடு தரும் செய்தி

திராவிட முன்னேற்றக்கழகத்தின் வெற்றியை ஏனைய அரசியல் கட்சிகள் எவ்வாறு கருதும் என்பதும் தேர்தல் முடிவுகளைப் போலவே, முன்கூட்டி உணரக்கூடியதாக இருந்துள்ளது. திரு. ராஜீவ்காந்தி இந்தத் தேர்தலை காங்கிரசின் தேசிய கலாச்சாரத்துக்கும், திராவிட மரபுக்கும் இடையே நடக்கும் போராகவே கருதி, திராவிட ஆட்சியின் இருண்ட காலத்தை அகற்ற காமராஜ் சகாப்தத்தை மீண்டும் காங்கிரஸ் கொண்டு வரும் என்று உறுதி கூறினார். இந்த நிலையை எடுத்ததன் மூலம் மிகப்பெரிய தப்புக் கணக்கை அவர் போட்டுவிட்டார். நாம் இன்றும் கண்ணுக்கு நேர் காண்பதுபோல, பிராந்திய திராவிட உணர்வு தமிழ்நாட்டில் இன்னும் மிக வலிமையுடன் தானிருக்கிறது; எதிர்த்து நிற்பதைத் தோல்வியுறத்தான் வைக்கிறது. தனக்கு வாக்களித்தால், தமிழகம் சென்னையிலிருந்துதான் ஆளப்படும். டெல்லியிலிருந்து ஆளப்படாது என்று தி.மு.க. செய்த பிரச்சாரம் மக்களை உடனடியாகக் கவர்ந்தது. இவையனைத்துக்கும் சிகரம் வைத்ததுபோல், திராவிட மரபுக்கு மற்றவரைவிட, திரு. கருணாநிதிதான் உண்மையான வாரிசு என்ற உண்மையும் அமைந்துவிட்டது. காமராசர் தமது கடைசிக் காலத்தில் இந்திரா காந்தியின் காங்கிரசோடு போராடி இதயம் உடைந்து மாண்டார் என்பதைத் தமிழக மக்கள் மறந்துவிடவுமில்லை. மேலும் திரு ஜி. கே. மூப்பனாரை, முதலமைச்சர் பதவிக்கான காங்கிரஸ் வேட்பாளர் என்று அறிமுகப்படுத்தியதன் மூலம் திரு. ராஜீவ் ஒன்றைக் கவனிக்கத் தவறிவிட்டார். திரு. கருணாநிதி தமிழ்நாட்டின் மிகச் சிறந்த நிர்வாகியாகப் பொதுவாக அனைவராலும் கருதப்

படுகிறார்: அதே நேரத்தில், திரு. மூப்பனார் இதற்குமுன் தேர்தலில் நின்றதும் இல்லை; ஒரு பதவியில் இருந்ததும் இல்லை என்பதையும் அவர் கவனிக்கத் தவறிவிட்டார். அது போலவே காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மத்திய அரசு ஏராளமாக நிதி முதலீடு செய்யும் என்னும் திரு ராஜீவ் காந்தியின் அவசர வாக்குறுதிகளும் மக்களைக் கவரவில்லை. இதுவும் மக்களின் நம்பிக்கையின்மைக்கு மற்றொரு காரண மாகும். பண்பாட்டில் வேர் விட்டு நிற்கும் தமிழ்நாட்டின் பெருமித உணர்வை அவ்வளவு சுலபமாக விலைக்கு வாங்கிட முடியாது. எனவே திராவிட இனத்தின் உணர்வுகளை ஒடுக்க திரு ராஜீவ்காந்தி எடுத்த முயற்சிகளுக்கு எதிராக மக்கள் அளித்த மாபெரும் தீர்ப்பே தனது கட்சியின் வெற்றி என்னும் திரு கருணாநிதியின் கூற்றிலும் ஓரளவு உண்மை யுள்ளது.

ஆனால் தனது வெற்றி, தேசிய முன்னணிக்கும் கிடைத்த வெற்றி என்று திரு. கருணாநிதி கூறும்போது அதில் அவரது தாராள மனப்பான்மையே தெரிகிறது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு தமது கட்சி திரும்பவும் ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தப் பட்டுள்ளது. அது, தனிமை தரும் இனிமையிலே அவர் தாராளமாக நியாயமாகவே நினைத்து மகிழத்தக்க வெற்றி தான். தேசிய முன்னணியைப் பொறுத்த வரையில், தமிழகம் தந்த தீர்ப்பு, பிராந்தியக் கட்சிகளுக்கு அது தந்துவரும் இன்றியமையாமையை உறுதிப்படுத்துகிறது என்பதே யாகும்.

— தி டைம்ஸ் ஆப் இந்தியா
24.1.89

தமிழ்நாட்டின் தீர்ப்பு

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன் னேற்றக் கழகம் தனிப்பெரும் வெற்றி பெறும் என்பது ஐயத்துக்குரியதாக இருக்கவில்லை. அரசியல் கணிப்புகளில் முதன்மையாக இடம் பெற்றது—இரண்டாவதாக காங்கிரஸ் வருமா, ஜெயலலிதாவின் அணிவருமா என்ற கேள்வியே யாகும்.

— பேட்ரியாட்
24.1.89

மீண்டும் ஒரு மோசே

அது, திரு. கருணாநிதி அவர்களுக்கு வாழ்வில் மறக்க முடியாத வேளை.

மாற்றுக்கட்சியினர் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்குவதற்கு மிக முன்பாகவே தமது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்க உதவிய 35 இலட்சம் கட்சித் தொண்டர்களுக்கு, அவர் உறுதியளித்தபடி ஆட்சியைப் பெற்றுத் தந்த உன்னத வேளை! அ.இ.அ.தி.மு.க. தலைவர்கள் தங்களுக்குள்ளேயே சச்சரவிட்டுக் கொண்டு, இந்திராகாங்கிரசுடன் கூட்டு வைத்துக்கொள்வதா வேண்டாமா என்று குழம்பிக்கொண்டிருந்தபோது, கருணாநிதி ஏற்கனவே தமது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டிருந்தார்.

தி.மு.க. வுக்கு வாக்களித்த இலட்சக்கணக்கானமக்கள், தற்போது, தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்ட அந்தப் பொன்னுலகம் நோக்கித் தம்மையழைத்துச் செல்லும் புனித மோசே என்றே திரு. கருணாநிதியை நம்பி இருக்கிறார்கள்.

— ஸண்டே
5-11 பிப்ரவரி'89

மகத்தான வெற்றி

இந்திரா காங்கிரசை மூன்றாவது இடத்துக்குத்தள்ளி, திராவிட முன்னேற்றக்கழகம் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளது. ஈழல் பிரச்சினையோ, இலங்கைத் தமிழர் சிக்கலோ மிகப்பெரிய விஷயமாக முன் வைக்கப்படாத இந்தத் தேர்தலில், ராஜீவ்காந்தியை முன் வைத்துச் செய்யப்பட்ட காங்கிரஸ் பிரச்சாரத்தைவிட, எம். ஜி. இராமச்சந்திரனுக்கு நாங்களே வாரிசு என்னும் அ.இ.அ.தி.மு.க. வின் இருபிரிவுகளின் கோரிக்கைகளைவிட, சிறந்ததொரு நிர்வாகத்தை அளிப்போம் என்னும் தி.மு.க. வின் வாக்குறுதிதான் வாக்காளர்களைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

12 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் தி.மு.க. வை மக்களின் உயர்ந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் ஒரு மாபெரும் அறைகூவல் எதிர்நோக்கியுள்ளது.

— :பிரன்ட்லைன்
17.2.89

மீண்டும் ஏதேன் தோட்டம்

சென்னை, கோபாலபுரம் 4-ஆவது தெருவின் 7ஆம் எண் இல்லம் சுறுசுறுப்பாகத் திகழ்ந்தது. தமிழ்நாடு சட்ட மன்றத்துக்கான தேர்தல்கள் முடிந்து, அப்போதுதான் முடிவுகள் வரத்தொடங்கியிருந்தன. முதல் செய்திகளே ஊக்கமூட்டின. ஏனெனில், தி.மு.க விற்குப் பெரு வெற்றி யையும், கலைஞரென அனைவராலும் அழைக்கப்படும் மு. கருணாநிதி அவர்களுக்கு, முதலமைச்சராக, வெற்றிகர மாகத் திரும்பவும் வருகின்ற வாய்ப்பையும் அவை சுட்டிக் காட்டின. அந்தப் பதவி 1976 ஜனவரி 31ஆம் நாள் விலகு மாறு அவர் நிர்ப்பந்திக்கப்பட்ட பதவிதான். திருமதி இந்திராகாந்தி அவரது ஆட்சியை ஊழல் நிர்வாகம் என்ற பேரில் கலைத்தார். ஆனால் உண்மையில் அன்று உச்சத்தி லிருந்த அவசர நிலையை எதிர்க்கத் துணிந்ததற்காகவே அவரது ஆட்சி கலைக்கப்பட்டது.

கருணாநிதி பதின்மூன்று ஆண்டுகாலம் காத்திருந்தார். துன்பகரமான நீண்டகாலக் காத்திருப்பு அது.

வியக்கத்தக்கவிடாப்பிடியானபொறுமையோடுவிளங்கி, திறன்மிக்க அரசியல்வாதியாகிய அவர் சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவைபோல் எழுந்துவிட்டார். 14 வயதி லேயே தொடங்கிவிட்ட நீண்டகால அரசியல் வாழ்வில் இன்னுமொரு சாதனையை அவர் புரிந்துவிட்டார்.

— தி இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆ::ப் இந்தியா
பிப்ரவரி 5, 1989



வென்றவர்களும் தோற்றவர்களும்

இது ஒரு மாபெரும் வெற்றியே. ஒரே வீச்சில், 90' களுக்கான தமிழ்நாட்டின் அரசியல் சரிதத்தை தி.மு.க. வரைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு மிதப்பில் இருப்பது எல்லோர்க்கும் இயல்புதான். ஆனால் தலையாய ராஜதந்திரியாகிய அதன் தலைவர் அந்தவெற்றி வேளையிலும் அமைதியாக, ஓரளவு பற்றற்ற சூழ்நிலையில் காணப்பட்டார்.

ஒரு பலமுனைப் போட்டியில் 33.44 சதவீத வாக்குகள் பெறுவது என்பது எளிதான வெற்றியல்ல. 1977இல் நடை பெற்ற பலமுனைப் போட்டியில் 130 இடங்களை வென்ற அ.இ.அ.தி.மு.க. 30.37 சதவீத வாக்குகளைத்தான் பெற முடிந்தது.

அனைத்து விஷயங்களையும் கருத்திலே கொண்டு, தேர் தல் வெற்றிக்குப் பிறகும் திரு கருணாநிதி மிகுந்தஎச்சரிக்கை யோடு செயல்படத் தொடங்கியுள்ளார். அவரே, தேர்தல் முடிந்த உடனே குறிப்பிட்டதுபோல, ஒரு முள்முடியைத் தான் முன்னிருந்த ஆட்சியாளரிடமிருந்து பெற்றிருக்கிறார். தருவதாக உறுதியளித்த நல்லாட்சியை வழங்க, தமது அரசுக்கு விரிவான ஆதரவை அவர் அமைக்க வேண்டி யுள்ளது. மேலும், 1994 தேர்தலையும், அதற்கும் அப்பால் வரலாற்றில் தமக்குரிய இடத்தையும் அவர் கருத்தில் கொள்ள வேண்டும். எனவேதான், தேர்தல் வெற்றிக்குப் பிறகு மு. கருணாநிதி சொல்லுகின்ற, செய்கின்ற ஒவ்வொன் றிலும் நிதானம் ஆட்சி செலுத்துகிறது. உண்மையில், தேர்தல் முடிவுகள் வரத்தொடங்கிய அந்த ஞாயிற்றுக் கிழமை அவரது முதற் செயலே, வெற்றிக் கொண்டாட்டத் தால் பொதுமக்களுக்கு எந்தவிதத் தொந்தரவையும் ஏற் படுத்தக்கூடாது எனக் கடுமையாக தமது தொண்டர்களை எச்சரித்ததுதான்.

தேர்தல் முடிவுகள் தெரிவிப்பது என்ன?

வாக்காளர் அளித்துள்ள செய்தி குழப்பமில்லாதது; எல்லோரையும் எல்லாச் சமயங்களிலும் முட்டாளாக்க முடி யாது என்பதுதான் அது.

இந்தத் தேர்தல், கூட்டம் அதிகம் வந்தால் வாக்குச் சீட்டுகளும் அதிகம் விழும் என்ற பொய்க்கதையையும்கடைசி யாக உடைத்தெறிந்துவிட்டது. சினிமா நட்சத்திரங்களும், பிரபல அரசியல்வாதிகளும் உலாவருவது பொழுதுபோக்கு வசதியற்ற கிராமப்புறத்து மக்களுக்கு ஒருபொழுதுபோக்கு.

அரசியல் சர்க்கசுக்கு கிராமப்புற மக்கள் பெருந்திரளாக வருவது பக்தியால் அல்ல; பார்க்க வேண்டுமென்ற ஓர் ஆர்வத்தால்தான்.

—அலைடு
1-15 பிப்ரவரி'89

கலைஞர் மிகச்சிறந்த திறமையான நிர்வாகி

அவரை நோக்கி நின்ற அறைகூவல் ஆற்றல் மிக்கது. அவருக்கு நேர்எதிரே முகாமிட்டிருந்தவர் நாட்டின் பிரதம மந்திரி. எதிர்நின்றது மாபெரும் பணவலிமை!

ஆனாலும், அண்மையில், 13 ஆண்டு வனவாசத்துக்குப் பிறகு, திருக்குவளை முத்துவேல் கருணாநிதி பெற்ற வெற்றி பிரதம மந்திரியோ, ஆளும் கட்சியோ எந்த அவசரத்திலும், அவகாசத்திலும் மறக்கக்கூடியதல்ல. செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை மறுபடியும் திராவிட முன்னேற்றக் கழகம் பிடித்தது.


சென்னை வள்ளுவர் கோட்டம் நினைவகத்தில் மாநிலத்தின் 13ஆவது முதலமைச்சராக தமது 17 உறுப்பினர் அமைச்சரவையுடன் பதவியேற்ற பிறகு, திரு. கருணாநிதி வெளியே வந்தபோது—தமிழ்நாட்டுக்கு உரியவகையில் மாபெரும் மகிழ்ச்சி வெளிப்பட்டது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர் பெயரைச் சூட்டக் கொண்டுவந்தார்கள்.

இந்திரா காங்கிரசைப் பொறுத்த வரையில் ராஜீவ் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்பட்ட மிகச் சிக்கலான அரசியல் நிகழ்ச்சியாகத் தமிழகத் தேர்தல் அமைந்தது. கட்சியின் கட்டமைப்பு, திறமை, செல்வாக்கு, அரசியலுணர்வு இவற்றுக்கான சோதனைக்களமாக இந்தத் தேர்தல் விளங்கியது.

ராஜீவ் விழுங்க இயலாத கசப்பு மாத்திரையாகவே தமிழகம் விளங்கி வருகிறது. ஒருமுகப்பட்ட எதிர்க்கட்சித் தாக்குதலுக்கேற்ற ஏவுதளமாகத் தமிழ்நாடு இனி விளங்கும். ஆனால், அடுத்த சில மாதங்களில் கருணாநிதி தூய, திறமையான ஆட்சியை மக்களுக்கு அளித்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

கருணாநிதி மிகச் சிறந்த திறமையான நிர்வாகி என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

— இந்தியா டுடே
15.2.1989



மக்கள் தீர்ப்பு

தமிழ்நாட்டு வாக்காளர்கள் அடுத்த ஐந்தாண்டுகாலத்துக்கு, நிலையற்ற ஒரு கூட்டணி ஆட்சி அமைவதைவிட, தனியொரு கட்சியின் ஆட்சியையே தாங்கள் விரும்புவதாக மறுபடியும் நிரூபித்துவிட்டார்கள். இனியும் அவர்கள் திரைப்பட மோகத்தில் இல்லை என்பதையே தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்திரா காங்கிரசை மூன்றாவது இடத்துக்கு அவர்கள் தள்ளியிருப்பது, தாங்கள் ஆளப்பட வேண்டியது சென்னையிலிருந்து தானே தவிர புதுடில்லியிலிருந்து அல்ல என்னும் அவர்களது விருப்பத்தைப் புலப்படுத்துகிறது. கலைஞர் கருணாநிதியின் நிர்வாகத் திறமையில் வாக்காளர் வைத்துள்ள நம்பிக்கையையே தேர்தல் முடிவு பிரதிபலிக்கிறது. பணவலிமையோ ஆள்வலிமையோ வாக்காளரின் உள்ளத்து உறுதியை வளைக்க முடியவில்லை. இப்பொழுது, மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்ற பிறகு ஊழலற்ற, திறன்மிக்க நிர்வாகத்தை அளிப்பதும், மக்கள் நலப்பணிகளுக்காகப் பாடுபடுவதும் கலைஞர்க்கும் அவரோடு துணை நிற்போர்க்கும் கடமையாகிறது. மக்களுக்கு நலம்பயக்கும் மாபெரும் பணிகளைச் செய்வதில் கலைஞருக்குக் கஷ்டம் ஏதும் இருக்காது என உறுதியாக நம்புகிறோம்—காரணம் அவர் பெற்றிருக்கிற பரந்த அனுபவ ஞானம்.

— .:ப்ரீ இந்தியா
29 ஜனவரி 89

உணர்ச்சிகரமான வெற்றி

இது ஓர் உணர்ச்சிகரமான வெற்றி. இன்னொருவர் துணையை நம்பியிருந்த இந்திரா காங்கிரஸ், பத்தாண்டுக் காலத்துக்குப் பிறகு முதன் முதன்முறையாகத் தனித்துப் போட்டியிட்டு, போட்டியிட்ட 208 இடங்களில் 26 இடங்களைத்தான் வெல்லமுடிந்தது என்பதைப் பார்க்கிறபோது தி.மு.க. வின் வெற்றி எங்கும் எதிரொலிக்கும் வெற்றியே! யாரோ ஒருவர் 'இதை உங்களது முயற்சிக்குக் கிடைத்த முழுவெற்றியாகக் கொள்ளலாமல்லவா' என்று கேட்டபோது 'இது மக்களின் வெற்றி' என்று கூறியிருக்கிறார் திரு. மு. கருணாநிதி.

ஒருவகையில், இந்தவெற்றி திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவரும் மேற்கொண்ட உழைப்புக்குக் கிடைத்த பரிசுதான். பத்தாண்டுக் காலம் பின்தங்கி இருந்து விட்டு, இத்தனை வலிவோடு எந்தவொரு கட்சியும் களத்திலே நின்றதும் வென்றதும் கிடையாது. தி.மு.க. பெற்ற தலைவர் கருணாநிதி சாதுரியத்தோடு எதற்கும் பின்வாங்காது தேர்தல் பணிபுரிபவர். அந்தக் கட்சியின் தொண்டர்களோ, சோராத உறுதியுடன் ஒரு குழுவாகச் செயல்படும் உள்ளம் உடையவர். தி.மு.க. வின் வெற்றிக்கு இந்த இரண்டும் இணையற்ற காரணங்களாகும்.

தி.மு.க. வெற்றியின் அறிகுறி தேர்தல் நேரத்திலேயே தென்பட்டதுதான், ஆனால் இத்தனை பேரளவில் அது வெற்றி பெறும் என்பது பலர் எதிர்பாராதது. பத்திரிகைகள் நடத்திய சோதனைத் தேர்வுகள் தி.மு.க. கணிசமான வெற்றி பெறும் என்பதை ஏற்கனவே காட்டியிருக்கின்றன. ஆனால் வெற்றி பற்றிய உறுதியோடு ஒருவர் இருந்தாரென்றால் அவர் கருணாநிதிதான். தேர்தலுக்கு முதல்நாள், செய்தியாளரிடம் அவர், ''நாங்கள், 130 இடங்கள், உயர்ந்த பட்சம் 140 இடங்கள், பெறுவோம்'' என்று கூறினார்.

தி.மு.க. வெற்றி தேசிய முன்னணிக்குக் கிடைத்த வெற்றியாகவும் கொள்ளப்படுகிறது. முன்னணியின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின் கடைசிக்கட்டத்தில் மும்முரமாகப் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

கட்சித் தொண்டர்கள், பெற்ற வெற்றியை இன்னும் கொண்டாடிக் கொண்டிருக்க, கருணாநிதியோ, தீவிரமாக அரசுப்பணிகளில் ஏற்கனவே கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார்.

— தி வீக்
பிப்ரவரி 5-11, 1989.



தீரு கருணாநிதி தீரும்பவும் முதல்வராகிறார்

மூன்று கோடித் தமிழக வாக்காளர்கள் கடந்த ஞாயிறு அன்று வழங்கியிருக்கும் மாபெரும் தீர்ப்பு, தங்களது அரசியல் விழிப்புணர்வுக்கும், மனமுதிர்ச்சிக்கும், அறிவுக்கூர்மைக்கும் தாங்களே அளித்துள்ள தகுதிச் சான்றிதழாகும். குறிப்பிடத்தக்க இந்தச் சாதனைக்காக அவர்களைப் போற்றத் தான் வேண்டும். தமிழகத்தில் ஜனவரி 21-ஆம் நாள் நடந்த தேர்தல் அளித்துள்ள பாடங்கள் பற்பல-அரசியல் கட்சிகள் அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள விரும்பினால் நிறையவே கற்றுக் கொள்ளலாம். தமிழகத்துக்கு வருகிற தலைவர் யாராயினும், அவரது கட்சி முத்திரை எதுவாக இருந்தாலும் மக்கள் அவர்களது பேச்சுக்குச் செவி கொடுத்தார்கள். நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளிலிருந்து வந்த அரசியல் தலைவர்களின் உரைகேட்க எவ்வாறு கூடினார்களோ, அதைப்போலவே திரையுலக நட்சத்திரங்களைக் காணவும் பெருந்திரளாகக் கூடினார்கள். ஆனால், தங்கள் தீர்ப்புக்களையும் முடிவுகளையும் இதயப் பேழைக்குள் இறுக மூடியே வைத்திருந்தார்கள். அரசியல் கட்சிகள் வீசிய வாக்குறுதிகள் விந்தையானவை. ஆனாலும், ஒரு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி என்ற உறுதிமொழிகூட

அவர்களைச் சலனப்படுத்தவில்லை. அத்தகைய வாக்குறுதியளித்த தலைவர்களால் அவற்றை நிறைவேற்றமுடியாது என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும். திராவிடர்ஆட்சி, காமராசர் ஆட்சி, எம். ஜி. ஆர். ஆட்சி போன்ற விஷயங்கள் எழுப்பப்பட்ட போதிலும் அவற்றுக்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. அவர்களின் அணுகுமுறை மிகத் தெளிவானது. எம். ஜி. ஆரிடம் அவர்கள் கொண்டிருந்த அன்பையும், போற்றுதலையும் அவரது மனைவி திருமதி ஜானகியிடம் உடனடியாக அவர்கள் திசைமாற்றி விடவில்லை. இரக்கத்தையும் அரசியலையும் அவர்கள் இணைத்துப்பார்க்க விரும்பவில்லை. அதே நேரத்தில் எம். ஜி. ஆரின் வாரிசு நான்தான் என்ற செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கையையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. எம். ஜி. ஆர். பெயரால் இன்னொருவர் ஆள்வதைத் தாங்கள் விரும்பவில்லை என்பதைத் தெளிவாகவே தெரிவித்து, ஆட்சிக்குப் போட்டியிட்ட இருதரப்பையுமே அவர்கள் நீக்கிவிட்டார்கள்.

இந்திரா காங்கிரசின் தேர்தல் வேலை முறை விஷயத்திலும் அவர்கள் காட்டிய வெறுப்பு வியக்கத்தக்கது.

ஆகவே, மக்களின் மகத்தான பின்பலத்தைக் கொண்டிருக்கும் திரு. கருணாநிதி, மாநிலத்தின் தூய புகழை மீண்டும் நிலைநாட்ட வேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். எஃகனைய உள்ளத்து உறுதியோடு செயல்படும் தேர்ந்த, திறன்மிக்க, நிர்வாகி என்ற சாதனைச் சரித்திரம் ஏற்கனவே அவர் படைத்ததுதான். எனவே மக்களின் எதிர்பார்ப்புகளைச் செயல்படுத்துவது அவருக்கு எளிதானதுதான். அவ்வாறு செயல்படுத்தும் மகத்தான அதிகாரத்தை மக்கள் அவருக்கு வழங்கியிருக்கிறார்கள்.

— நியூஸ்டைம்
24.1.'89



வெளியீடு :

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு அச்சகம், சென்னை-600 002

15,000 பிரதிகள் மார்ச் 1989

வாராந்தரி ராஜஸ்ரீ

Patriot

THE HINDU

கல்கண்டு

கலைக்கதிர்

THE INDIAN EXPRESS

Newstime

குமுதம்

Asside

மாங்களம்

சாவி

The Week

உங்கள் விகடன்

தினகரன்

தீபாதி

முல்லைம் முரசு

குங்குமம்

THE ILLUSTRATED WEEKLY OF INDIA

THE FEATURES MAGAZINI

SUNDAY

ஆனந்த விகடன்

INDIA TODAY

தினமணி